SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**பெயர்: ______ விளக்கச்சோதனைத் தேர்வு – 1(2022-2023) வகுப்பு: ஆறு**

**பாடம் : தமிழ் தேதி: 15.07.2022**

**மதிப்பெண்கள் : 30 காலஅளவு: 1 ½ மணிநேரம்**

**இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

**பிரிவு : அ படித்தல் - 5 மதிப்பெண்கள்**

**பிரிவு : ஆ எழுதுதல் - 5 மதிப்பெண்கள்**

**பிரிவு : இ இலக்கணம் - 6 மதிப்பெண்கள்**

**பிரிவு : ஈ இலக்கியம் - 14 மதிப்பெண்கள்**

---

- **கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

## பகுதி - அ

**I) பத்தியைப் படித்து விடையளி. (5x1=5)**

சுவாமி விவேகானந்தர் 1863- ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். தந்தையார் விசுவநாத தத்தர். தாயார் புவனேசுவரி. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் நரேந்திரதத். குழந்தைப் பருவத்திலேயே தாம் நினைத்ததை விடாப்படியாகச் செய்து முடித்துக் கொள்ளும் திறமை இவருக்கு இருந்தது. நரேந்திரதத் சிறு வயதிலேயே ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவராக இருந்தார். தனிமையில் அதிக நேரம் தியானம் செய்வதில் ஈடுபடுவார். மனதை ஒரு நிலைப்படுத்தி தெளிவான சிந்தனையுடன் இருப்பதற்கு தியானம் பெரிதும் உதவும் என்பதை அவர் உணர்ந்தார். நரேந்திரர், ஆசிரியர் பாடம் சொல்லித் தரும் போது கண்களை மூடியபடி அமர்ந்திருப்பார். இராமகிருஷ்ண பரமஹம்சரின் தெளிவான தத்துவமும், நிறைவான கருத்துகளும் இளைஞரான நரேந்திரரைக் கவர்ந்தன.

**வினாக்கள்.**

1. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் ______________.

(அ) கமல்தத் (ஆ) வால்மீகி

(இ) நரேந்திரதத் (ஈ) இராமகிருஷ்ணர்

2. தெளிவான சிந்தனைக்கு உதவுவது ______________.

(அ) இன்பம் (ஆ) தியானம்

(இ) கவனம் (ஈ) அறிவு

3. ______________ சிந்தனைகள் விவேகானந்தரைக் கவர்ந்தது.

(அ) கமல்தத் (ஆ) வால்மீகி

(இ) நரேந்திரதத் (ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. விவேகானந்தர் சிறு வயதிலேயே _____________ நாட்டம் கொண்டவராக இருந்தார்.

(அ) ஆன்மீகத்தில் (ஆ) பண்பில்

(இ) அன்பில் (ஈ) படிப்பில்

5. விவேகானந்தர் _____________ பிறந்தார்.

(அ) இங்கிலாந்தில் (ஆ) கனடாவில்

(இ) கல்கத்தாவில் (ஈ) சென்னையில்

## பகுதி - ஆ

**II. கீழ்க்காணும் படத்தைப் பார்த்து அதைப் பற்றி 5 வரிகள் எழுதுக. (5)**

6.



## பகுதி - இ

**III. நிரப்புக.** **(6x 1=6)**

7. எழுத்துகளை ஒலிக்கும் ஓசை ________________ வகைப்படும்.

(அ) ஏழு (ஆ) ஆறு (இ) இரண்டு

8. மெய் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு ___________ .

(அ) ஒரு மாத்திரை (ஆ) அரை மாத்திரை (இ) இரண்டு மாத்திரை

9. சீரிளமை – என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் __________.

(அ) சீற் + இளமை (ஆ) சீரி + இளமை (இ) சீர்மை + இளமை

10. மெல்லின எழுத்துகள் ________________.

(அ) க்,ச்,ட்,த்,ப்,ற் (ஆ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் (இ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்

11. உயிர்க்குறிலெழுத்து ஒலிக்கும் கால அளவு ________________ மாத்திரை ஆகும்.

(அ) அரை (ஆ) ஐந்து (இ) ஒரு

12. நெப்போலியன் என்ற பெயரின் மாத்திரை அளவு ________________.

(அ) ஆறு (ஆ) ஐந்து (இ) எட்டு

## பகுதி - ஈ

**IV. பின்வரும் குறுவினாக்களுக்கு விடையளி.** **(3x 2= 6)**

13. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

14. பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்களை எழுதுக.

15. நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?

**V. பின்வரும் சிறுவினாக்களில் எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி.** **(2 x 4 = 8)**

16. தமிழ்மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

17. தமிழ் மூத்தமொழி எனப்படுவது எதனால்?

18. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?

19. கீழ்க்காணும் பெயர்களுக்கான மாத்திரை அளவைக் கண்டுபிடி.

(அ) சத்திமுத்தப்புலவர்.

(ஆ) டாக்டர் சலீம் அலி.

(இ) சாண்டியாகோ.

(ஈ) டாக்டர் அப்துல் கலாம்.